# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் புதிய விஸ்தரிக்கப்பட்ட கட்டிடத்திற்கு மேசைகள் மற்றும் ஏனைய தளபாடங்களை வழங்குதல்

**ஒப்பந்த (விலைக்கோரல்) இல. TRC/ADM/01/24/04/24-III**

1. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் புதிய விஸ்தரிக்கப்பட்ட கட்டிடத்திற்கு மேசைகள் மற்றும் ஏனைய தளபாடங்களை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை) தலைவரினால் அழைக்கப்படுகின்றன.

2. தகுதி வாய்ந்த ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிர்வாகம் மற்றும் கூட்டுவர்த்தக விவகாரங்கள் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2025-10-09ஆம் திகதி முதல் 2025-10-22ஆம் திகதி வரையான வேலை நாட்களில் 0900 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம் வரையான காலத்தில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

3. அரசாங்க பெறுகை வழிகாட்டி மற்றும் NPA/Goods/SBD 01 நிலையான விலைமனு ஆவணத்தின் கீழ் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படும்.

4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிக்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதிருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

   அ) தளபாடங்கள், பொருத்தல்கள் மற்றும் உபகரணம் (FF&E) - SP3 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவு

   அல்லது

   ஆ) தொடர்ச்சியான கடந்த ஐந்து வருடங்களில் அனுபவம் மற்றும் இலங்கையில் ஒரு தளபாட உற்பத்தியாளராக அல்லது தளபாடங்களை வழங்குவதற்கான அங்கீரிக்கப்பட்ட முகவராக நிறுவனப் பதிவைக் கொண்டிருத்தல்.

5. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகளில்

   - கடந்த ஐந்து வருடங்களில் ஏதாவது மூன்று வருடங்களில் உள்ளக அலங்கார வேலைகள் அல்லது வழங்கல் அல்லது தளபாடங்களின் உற்பத்தி மற்றும் வழங்கலில் சராசரி வருடாந்த புரள்வு குறைந்தபட்சம் 31 மில்லியன் ரூபாவாகவிருக்க வேண்டும்.
   - 6 மாத காலத்திற்குள் 20 மில்லியன் ரூபா பெறுமதியான தளபாடங்கள் வழங்கலில் ஒரு ஒப்பந்தம் அல்லது கடந்த ஐந்து வருட காலத்தில் குறித்த நேர காலத்தில் அதிக பெறுமதியான ஒப்பந்தமொன்றை சித்திகரமாக நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
   - குறைந்தபட்ச திரவச் சொத்துக்களின் தொகை (ஏனைய ஒப்பந்தக் கடப்பாடுகளுக்காக ஒதுக்கிய பின்) பிரத்தியேகமாக இந்த ஒப்பந்தத்தின் கீழ் பெறப்பட்ட ஏதாவது முற்பணங்கள் தவிர 10.5 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருக்க வேண்டும்.
   - 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட ஒப்பந்தமானால் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் பிரகாரம் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழைக் கொண்டிருக்க வேண்டும்.

6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத ஐயாயிரம் ரூபாவை (5000.00) செலுத்துவதன் பேரில் 2025-10-09ஆம் திகதி முதல் 2025-10-22ஆம் திகதி வரையில் 0900 மணித்தியாலம் மற்றும் 1500 மணித்தியாலத்திற்கிடையில் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் (நிர்வாகம் மற்றும் கூட்டுவர்த்தக விவகாரங்கள் பிரிவு) பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

7. நகல் பிரதிகள் சகிதம் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2025-10-23ஆம் திகதி 1400 மணித்தியாலம் அல்லது அதற்கு முன் ஒப்படைக்க வேண்டும் அல்லது நிர்வாகம் கூட்டுவர்த்தக விவகாரங்கள் பிரிவு அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைக்கோரல் முடிவுறுத்தல் நேரத்தின் பின் விலைமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும்.

8. சகல விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகாரம் பெற்ற இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட இரண்டு இலட்சத்து பத்தாயிரம் ரூபா (ரூபா 210,000.00) பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது விலைமனு ஆவணத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள வடிவத்தில் இருக்க வேண்டும் என்பதுடன் 2026-02-05ஆம் திகதி வரையிலும் செல்லுபடியாகும் தன்மையில் இருக்க வேண்டும்.

9. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2025-10-15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு தரை தளத்திலுள்ள கூட்ட அறையில் இடம்பெறும்.

மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் கூ.வ.வி),**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,**
**இல. 276, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு 08.**
**தொலைபேசி: 0112669789**

**2025-10-08.**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,**
**இல. 276, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு 08.**